பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 17 சனிக்கிழமை 30.04.2022 கதிர் 176

**இனி இது ரகசியம் அல்ல!**

கொழும்பின் அரசியல் நிலைவரம் சூடு பிடிக்கின்றது. நாளை பிறக்கும் புதிய வாரத்தில் பல அதிரடி திருப்பங்கள் நிச்சயமாக நடக்கும் என்று நம்பலாம்.

நாடாளுமன்றத்தில் தனது அரசுக்குப் பெரும்பான்மை உள்ளதோ, இல்லையோ,
☞2

# மஹிந்தவை அகற்றுவதற்கு மகாசங்கத்தினர் களத்தில்!

## ஆயிரம் பிக்குகள் இன்று கொழும்பு வருகை



(ஆர்.சனத்)

கொழும்பு, எப்ரல் 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து அகற்றும் நடவடிக்கையில் மகாசங்கத்தின் அணி நேரடியாகக் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றது.

மகாசங்கத்தினர் ஆயிரம் பேர் இன்று (30ஆம் திகதி) கொழும்புக்கு வருகின்றனர். மகா சங்கத்தினருக்கும், சர்வ கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. சர்வக்கட்சி இடைக்கால அரசுக்கு கட்சித் தலைவர்களை ஒன்றிணைப்பதற்கான ஓர் நகர்வாகவே இது கருதப்படுகின்றது.
☞11

## சர்வகட்சி அரசுக்கு ஜனாதிபதி அழைப்பு



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய
☞2

## இடைக்கால அரசுக்கு இணங்குமாறு சஜித்துக்கு அச்சுறுத்தல் அழைப்புகள்

### எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிக்கப்படும் என்று மிரட்டலாம்

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு இணங்கத் தவறினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என தனக்கு அச்சுறுத்தல் அழைப்புகள் வந்துள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

மீரிகமவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும்
☞2



## P2P பேரணி தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு; வழக்கைத் தள்ளுபடி செய்தது கல்முனை மன்று

### சாணக்கியன், ஜனா, கலையரசன் உட்பட எழுவரும் விடுதலை

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான (P2P) பேரணி தொடர்பில் நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி அதில் பங்கு பங்குபற்றியமை மூலம் நீதிமன்றத்தை அவமதித்தனர் எனஏழுதமிழ்ப்பிரமுகர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கைக் கல்முனை
☞2

## சாணக்கியனுக்குத் தடை; மேன்முறையீட்டுக்கு முடிவு

### சுமந்திரன் நேற்றுத் தகவல்

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் பங்கு பற்றுவதற்கு தடைவிதித்து களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுத்த உத்தரவுக்கு
☞6

## பிள்ளையான் நேற்றுப் பங்குபற்றிய வாகரைக் கூட்டத்தில் கைகலப்பு!



மட்டக்களப்பு வாகரையில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையில் மீன்வளர்ப்பு திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று
☞2

## நாங்கள் நாங்களாக வாழுகின்ற உரிமை வந்தால் மட்டுமே பொருளாதாரத்திலும் அரசியலிலும் வெற்றி காண முடியும்!

### இடித்துரைக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

இலங்கைத் தீவில் நாங்கள் நாங்களாக வாழுகின்ற உரிமையும் நீங்கள் நீங்களாக வாழுகின்ற உரிமையும் எப்போது இருக்கின்றது என்பதை சிங்கள தேசம் உணர்ந்து கொண்டால் மாத்திரமே பொருளாதாரத்திலும் அரசியலிலும் வெற்றி காண முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் மறைந்த முன்னாள் அதிபர் கனகராஜா மகேந்திரராஜா அவர்களது நினைவு நிகழ்வும் பொற்கால
☞2

## நாடு முழுதும் கிளர்ச்சி; வட, கிழக்கில் மட்டும் சத்தம் கேட்கக் கூடாது என நடக்கிறது அரசு

### சிவராம் நினைவு நிகழ்வில் சுமந்திரன் விசனம்

நாடு முழுவதும் கிளந்தெழுந்திருக்கின்ற போதும் கூட எங்களது வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களிலே எந்தவித சத்தங்களும் கேட்கக் கூடாது என்ற வகையிலே அரசாங்கம் செயற்படுகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம்
☞11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தன்னுடைய அரசை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் வீழ்த்தும் பலம் தனது அரசை இப்போது எதிர்த்து நிற்கும் தரப்புகளிடம் இல்லவே இல்லை என்று திடமாகவும் மிக உறுதியாகவும் நம்புகின்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதைத் தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெளிவாக உணர்த்தியும் விட்டார்.

மாற்று அரசு அல்லது இடைக்கால அரசு அமைக்கக் கோரும் தரப்புகளிடம் நாடாளுமன்றப் பெரும்பான்மை என்ற 113 எம்.பிக்களின் ஆதரவுப் பலம் இல்லை. அது கிட்டாத வரை – அவர்களின் நாடாளுமன்றப் பெரும்பான்மை நிரூபிக்கப்படாத வரை – தன்னைப் பிரதமர் பதவியில் இருந்து தூக்கக் கூடாது என்ற பிரதமரின் எதிர்பார்ப்புக்கு இப்போதைக்கு தலையசைத்துவிட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இப்படி மஹிந்தரின் ஆளும் தரப்பும், அதற்கு எதிராகக் கிளர்ந்திருக்கும் விமல் வீரவன்ஸ், உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, சு.கவினர் மற்றும் சுயாதீனமாக இயங்கும் அதிருப்திக் குழுவினர் போன்றோரும் மேற்படி 'மேஜிக்' எண்ணிக்கையான 113 ஐ எட்ட முடியாமல் இருக்கின்றமைக்குப் பிரதான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதுதான். கூட்டமைப்பு எந்தப் பக்கம் நிற்கும், எப்படி நிலை எடுக்கும் என்று தெரியாமல் இருப்பதுதான் சிக்கலுக்குக் காரணம்.

முரண்டு பிடித்துக் கொண்டு நிற்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை மேற்படி அரசின் அதிருப்தி குழுவினர் தங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு ஒருவாறு இறங்கிவரப் பண்ணினாலும் 113 என்ற பெரும்பான்மையை அந்தக் குழுவினர் எட்டுவதற்கு அது போதுமானதல்ல என்பது இரண்டு தரப்பினருக்கும் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து எம்.பிக்கள்தான், இப்போது கன்னை பிரிந்து நிற்கும் ஆளும் தரப்பு மற்றும் எதிர்தரப்பு ஆகிய இரண்டு பக்கங்களிலும் எதன் பக்கம் பெரும்பான்மை விழப்போகின்றது என்பதைத் தீர்மானிக்கும் நிலையில் உள்ளனர்.

அதனால் இப்போதைய நிலையில் தமிழர் தரப்பின் நிலைப்பாடுதான் தீர்மானிக்கும் சக்தி என்றாகி உள்ளது.

நாடாளுமன்ற அரசியலை வைத்து, அதற்கான அட்சரகணித எண்ணிக்கை மாற்றங்களை முன்னெடுக்க முயன்றால் அது இப்படி ஓர் இக்கட்டில்தான் – அல்லது தீர்மானிக்கும் சாவியை தமிழர் தரப்பு வைத்திருக்கும் ஒரு நெருக்கடியில்தான் – போய் நிற்கின்றது என்பது தென்னிலங்கை தரப்புக்களை விசனத்துக்குள் ஆழ்த்தியுள்ளது எனத் தெரிகின்றது.

ஆளும் – எதிர்த் தரப்புகளுக்கு இடையில் இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்திற்கான இழுபறியில் விடயத்தை அல்லது முடிவை தீர்மானிக்கும் பெரும் சக்தியாக தமிழ்க் கூட்டமைப்பு மாறும் சாத்தியங்கள் அதிகம் தென்படுன்றன. இரண்டு பக்கத்தினருமே 113 ஐ எட்டுவதற்கு ஐந்து முதல் பத்து எம்.பிக்களின் ஆதரவு குறைவான நிலையில் உள்ளனர்.

ஆகவே இன்று, இப்போதைய நிலையில், முதலில் முடிவைத் தீர்மானிக்கும் சக்தி தமிழர் தரப்பின் கைகளுக்கு வந்துள்ளது.

இதை அனுமதிப்பது தமிழர்களை இந்தத் தீவின் வலுவான சக்தியாக மாற்றிவிடும் என்று சிந்திக்கும் பௌத்த மகா சங்கம், அந்தச் சந்தேகத்துடனேயே களத்துக்குள் இப்போது இறங்குகின்றது.

நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை என்ற அட்சரகணிதப் போராட்டத்தைத் தொடர்ந்தால் – அல்லது அதில் தங்கியிருந்தால் – தமிழ், முஸ்லிம் எம்.பிக்களின் ஆதிக்கம் அதிகரித்துவிடும் என்று கருதும் மகாசங்கம் அதனால்தான் நேரடியாகத் தானே களத்தில் இறங்கும் நிலைமைக்கு வந்திருக்கிறது.

நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை அடிப்படையில் விவகாரம் தனக்கு எதிராகத் திரும்பாமல் தன்னுடைய தந்திரோபாய நகர்வுகளினால் காப்பாற்றிக் கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இனி என்ன செய்யப்போகிறார் என்பதுதான் கேள்வி.

தமிழ் – முஸ்லிம் எம்.பிக்களின் தயவில் தங்கி நின்று தீர்மானங்களை சிங்களத் தலைவர்கள் தரப்பு எடுப்பதைப் பிடிக்காத பேரினவாதம், மாற்று வழிமுறைகளை நாடுகிறது.

நாடாளுமன்ற எண்ணிக்கை என்ற அட்சரகணிதக் கணக்கின் மூலம் தன்னை பாதுகாத்துக் கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சி இன்று வரை அவருக்குச் சாதகமாகப் பலித்துள்ளது.

ஆனால் விடயத்துக்குள் பௌத்த மகா சங்கம் வந்ததும் நிலைமை தலைகீழாக மாறும் சூழல் வரும் என எதிர்பார்க்கிறேன்.

சங்க சபாவின் பிரகடனம் மூலம் பிரதமரை நெருக்கடிக்குள் ஆழ்த்தி, அதன் மூலம் அவரது ராஜினாமாவைப் பெற்று, இடைக்கால அரசு ஒன்றை நியமிக்கும் நடவடிக்கையை சங்க சபா தன்னுடைய அதிகாரச் செல்வாக்கின் மூலம் முன்னெடுக்கும் என்று தெரிகிறது.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ற அட்சரகணித கணக்குச் சண்டை முடிவுக்கு வந்துவிடும்.

சங்க சபாவின் அல்லது மகாநாயக்க தேரர்களின் தீர்மானத்தின்படி, அரசும் பிரதமரும் மாறும் நிலைமை வருமாயின், அதன் பின்னர், சற்றுக் காலத்தில் ஜனாதிபதியின் கழுத்துக்குக் கூட கயிறு அதே பாதையில் விழக்கூடும்.

பௌத்த மத விடயத்தில் அதன் காலில் விழத் தயாராக இருக்கும் சிங்களத் தலைமைகள், நாட்டின் அரசியல் தீர்மானத்தை எடுக்கும் தங்களின் அதிகாரத்தையும் கூட மகாநாயக்கர்களின் காலில் காணிக்கையாக வைத்து, நாட்டின் அரசியலை சங்க சபை தீர்மானிக்கும் நிலைமையை முழுமையாக உறுதிப்படுத்தி, நாட்டை நாசம் செய்யப் போகின்றன என்பது உறுதி.

இலங்கையின் அரசியல் செல்நெறியைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை பௌத்த சங்கங்களிடம் கையளிக்கும் வரலாற்றுத் தவறு – இவ்வாரத்தில் – நாளை பிறக்கும் வாரத்தில் – கட்டவிழும் என எதிர்பார்க்கிறேன். பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று...!

– மின்னல் –

---

## P2P பேரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீதிவான் நீதிமன்றம் நேற்று விலகிக் கொண்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி சமர்ப்பித்த விண்ணப்பத்தை ஏற்று நீதிவான் வழக்குகளை அடியோடு தள்ளுபடி செய்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாணக்கியன் இராசமாணிக்கம், கோவிந்தம் கருணாகரன் (ஜனா), கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் உட்பட ஏழு பேருக்கு எதிராக இந்த வழக்கு கல்னை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இத்தகைய வழக்குத் தொடர்ந்தமை தவறு என சுமந்திரன் கல்முனை நீதிவான் மன்றில் முதலில் சுட்டிக் காட்டிய போதிலும் நீதிமன்றம் அதனை ஏற்கவில்லை. அதனை அடுத்து கல்முனை நீதிவான் மன்றில் முன்னர் பணியில் இருந்த மற்றும் இப்போது பணியில் இருக்கின்ற இரு நீதிவான்களினதும் பெயர்களையும் குறிப்பிட்டு மனுதாரர்கள் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தடையாணை விதிக்கக் கோரும் மனுக்களை சுமந்திரன் தாக்கல் செய்தார். அவற்றை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், கல்முனை நீதிமன்ற விசாரணைக்கு எதிராக இடைக்கால தடை விதித்தது.

எனினும் வழக்கு நியாயங்களை பரிசீலித்து வழக்கை தள்ளுபடி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதை முடிவு செய்வதற்காக மாத்திரம் கல்முனை நீதிமன்றம் அந்த வழக்கைக் கவனத்தில் எடுப்பதற்கு அனுமதிக்கும்படி சுமந்திரன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் புதிய ஒரு விண்ணப்பம் மூலம் கோரினார்.

அதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு மன்று, அந்த விடயத்தை மட்டும் கவனத்தில் எடுத்து வழக்கை முடிவுறுத்துவதாயின் அதற்காக மாத்திரம் வழக்கைக் கல்முனை நீதிவான் மன்று விசாரிக்க அனுமதித்து தனது இடைக்கால உத்தரவைத் தளர்த்தியது.

அதனடிப்படையில் மூல வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழக்கை பரிசீலித்த நீதிவான் வழக்கை அடியோடு தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

---

## பிள்ளையான் நேற்றுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெற்றபோது அங்கு கூடியிருந்த கிராம மக்கள் இத் திட்டத்திற்கு தங்களது எதிர்ப்பைக் காட்டினர்.

அப்போது ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது.

அமைச்சருடன் கூட வந்த ஆதரவாளர்கள் சிலரை பிரதேசப் பெண்கள் சிலர் பாய்ந்து செருப்பால் தாக்க முற்பட்டபோது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ஓரிரு அடிகளும் விழுந்தன.

அமைச்சருக்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸார் தலையிட்டு மோதலைக் கட்டுப்படுத்தினர்.

80 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 80 பயனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படவிருந்தது .

இதன் போது கூடியிருந்த கிராம மக்கள் இத் திட்டத்திற்கு தங்களது எதிர்ப்பைக் காட்டினர்.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக சம்பந்தப்பட்ட நீர் நிலையில் மீன் குஞ்சு விடும் நடவடிக்கை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

---

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய கட்சிகளுடன் இணைந்து இடைக்கால அரசாங்கத்தில் இணையுமாறு எனக்கு 24 மணி நேரமும் தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. இதனுள் மிரட்டல் அழைப்பும் வந்தது. என்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கும் திட்டம் இருப்பதாக ஓர் அழைப்பாளர் என்னிடம் கூறினார். எனக்கு எப்பொழுதும் பொது மக்களின் ஆதரவும் அனுதாபமும் இருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்வதற்குத் தயாராக உள்ளேன்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து யாரும் இடைக்கால அரசாங்கத்தில் சேர மாட்டார்கள். ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் அரசியல் டெலி நாடகம் ஒன்று வெளியிடப்பட்டது. பிரதமரை பதவி விலகுமாறு தாம் கோரவில்லை என ஜனாதிபதி அந்த குழுவிடம் தெரிவித்திருந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் நீண்ட காலமாக தொடர்பு கொண்டுள்ளார் எனவும், டலஸ் அழகப்பெருமவுடன் பழகுவதற்கு முன்பே மஹிந்த ராஜபக்ஷ தனது சகோதரர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார்.

அரசாங்கம் ஊறுகாய் ஆகிவிட்டது. இப்போது இடைக்கால அரசில் சேருமாறு எங்களைக் கோருகின்றனர். இடைக்கால அரசில் இணைவதை நாங்கள் எதிர்க் கின்றோம்.– என்றார்.

## சர்வகட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய – தற்போது சுயாதீனமாகச் செயற்படும் – கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக தேசிய ஒருமித்த அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அதன் முதற்கட்டமாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பங்களிப்புடன் தேசிய சபையொன்றை நியமிப்பதற்கும் இந்த கலந்துரை யாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

கட்சிப் பிரதிநிதிகள் முன்வைக்கும் பொதுத் தீர்மானத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளித்தால் தான் அதற்கு இணங்குவார் என ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் ஐந்து பேரை பெயரிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன உட்பட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, வாசுதேவ நாணாயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, மஹிந்த அமரவீர, அனுர பிரியதர்ஷன யாப்பா, விஜேதாச ராஜபக்ஷ, திஸ்ஸ விதாரண, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, தயாசிறி ஜயசேகர, வண.அத்துரலியே ரத்தன தேரர், லசந்த அழகியவன்ன, நிமல் லன்ஸா, ஜயந்த சமரவீர, ஜயரத்ன ஹேரத், டிரான் அலஸ், ஜகத் புஷ்பகுமார, நளின் பெர்னாண்டோ, எம்.எம். அதாவுல்லா, கெவிந்து குமாரதுங்க, வீரசுமன வீரசிங்ஹ மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

---

## நாங்கள் நாங்களாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மலர் என்ற நூல் வெளியீட்டு விழாவும் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் சிங்கள மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடுகிறார்கள். பச்சிளம் பாலகர்கள் கூட இறங்கிப் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் உங்களுடைய பங்கு என்ன என்று என்னிடம் ஒருவர் கேட்டிருந்தார்.

எங்கள் உறவுகள் – தங்க ☞11




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழ்த் தலைமையின் ஒப்புரவு

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணப் பொருள்களைத் தமிழக அரசின் சார்பில் வழங்குவது தொடர்பாக நேற்று தமிழக சட்டப் பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். அவை நோக்கற்பாலவை.

“இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே ஈழத் தமிழ் மக்களுக்கு நம்மாலான அனைத்தையும் வழங்குவோம் என நான் அறிவித்தேன். பிரதமரை நான் மார்ச் 31 அன்று நேரிலே சந்தித்து இதனை வலியுறுத்தினேன்.

“அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், அமைப்புகளும் எனக்கு ஒரு கோரிக்கை வைத்தனர். ‘தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி அனுப்ப வேண்டாம். இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள். மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம். அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்’ – என்று சொன்னார்கள்.

“அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு. பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே’ என்பதைப் போல இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்பதற்கு இது எடுத்துக் காட்டு.

“இந்த நிலையில் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாங்கள் உதவிகள் செய்தாக வேண்டும். அதனடிப் படையில் 40 ஆயிரம் தொன் அரசி (80 கோடி ரூபா), 147 ரகங்களில் உயிர் காக்கும் மருந்துப் பொருள்கள் (28 கோடி ரூபா), குழந்தைகளுக்காக ஐந்நூறு தொன் பால்மா (15 கோடி ரூபா) ஆகியவற்றை விரைந்து அனுப்பத் தீர்மானித்துள்ளோம்.” – என்று தமிழக முதல்வர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைப் பணத்தில் ஐநூறு கோடி ரூபாவுக்கு அதிகமான பெறுமதிக்குரிய உதவிப் பொருள்கள் இவை.

ஈழத் தமிழர்களை நெகிழ வைக்கும் தமிழகத் தலைவரின் செய்தி இது.

‘தானாடா விட்டாலும் தன் தசையாடும்’ என்ற தொப்புள் கொடி உறவுகளின் பற்றுணர்வை ஒவ்வொரு ஈழத் தமிழனும் பெருமையோடு கிரகித்துக் கொள்கின்றான்.

“தமிழர் என்று எங்களுக்கு மட்டும் தனித்து உதவி அனுப்பாதீர்கள். நாங்கள் இங்கு அனைவரும் இலங்கை நாட்டு மக்களாகவே சேர்ந்து துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் என உதவிகளை அனுப்புங்கள்” – என்று நீதியுரைத்த இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இருவர்.

ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். மற்றையவர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

தங்களின் உயர்ந்த மனிதாபிமானப் பண்பியல்பினால் தமிழக முதல்வரை நெகிழ வைத்த இந்த இரு தலைவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த நிலைப்பாட்டை எடுத்தமைக்காகப் புலம்பெயர் தமிழர்கள் பலராலும், உள்நாட்டில் பல தமிழ் அரசியல்வாதிகளினாலும் விமர்சிக்கப்பட்ட போதும், அதுதான் மனிதாபிமான நீதி, நேரிய பண்பியல்பு, உயரிய மார்க்கம் என்று அந்த நிலைப்பாட்டில் உறுதியாக நின்று – தமிழக முதல்வரை மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழக உடன்பிறப்புகள் அனைவரினதும் மனங்களையுமே தங்களுடைய ஒப்புரவு எனும் அருங் குணத்தினால் நெகிழ வைத்து வென்றுள்ளனர் அவர்கள் இருவரும்.

இந்தச் செய்தி முழுமையான விவரத்துடன் நம் சிங்களச் சகோதரர்களுக்கு – குறிப்பாகக் காலி முகத் திடலில் போராட்டம் நடத்தும் நமது பிற இன சகோதரர்களுக்கு – எட்ட வேண்டும். யார் இந்தச் செய்தியை அவர்களுக்கு எடுத்துச் செல்வர்...?

# பாரிய பொருளாதார நெருக்கடியை அடுத்த மாதம் எதிர்கொள்ள நேரிடும்

## ரணில் எச்சரிக்கை



பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தும் அனைத்து காரணிகளும் ஒரு மையப்புள்ளியை அண்மித்துள்ளன. நாட்டில்பொருளாதாரநெருக்கடிசிக்கலடைந்துள்ள ஒரு நூல் பந்துபோல் காணப்படுகிறதால்அதனைப்பொறுமையாகஅவிழ்க்கவும் முடியாது, விரைவாக வெட்டி விடவும் முடியாது.

எதிர்வரும் மாதம் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலைமை தொடர்பில் சமூக வலைத்தளங்களுக்கு காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

பொருளாதார நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறை,அரச வருமானம் வீழ்ச்சி, அரச செலவு உயர்வு,தாங்கிக்கொள்ள முடியாத கடன்சுமை ஆகியவை பிரதான காரணிகளாக அமைகின்றன.அரச கூட்டுத்தாபனங்கள் நட்டமடைதல் கடன்சுமையை மேலும் துரிதப்படுத்துகின்றன.

இலங்கை மின்சார சபை கடந்த 2021 ஆம் ஆண்டு 790 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் 790 கோடி ரூபா நட்டத்தைக் காட்டிலும் அதிகரித்த நட்டத்தை எதிர்க் கொண்டிருக்க வேண்டும் என சிலர் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வருட இறுதியில் இலங்கை மின்சார சபை 1000 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மின் அலகு உற்பத்திக்காக 53 ரூபா செலவாகும் அதேவேளை ஒரு மின் அலகிற்காக மின்பாவனையாளர்களிடமிருந்து 16 ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது.

மறுபுறம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2021ஆம் ஆண்டு 830 கோடி ரூபா நட்டத்தை எதிர்க்கொண்டுள்ளது. எரிபொருள் விலை அதிரிக்காத காரணத்தால் 100 கோடி ரூபா நட்டத்தை எதிர்க்கொண்டுள்ளதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டுள்ள அதே வேளை விலை அதிகரிப்பை தொடர்ந்தும் கூட்டுத்தாபனம் நாளாந்தம் 3 கோடியே 27 லட்சம் ரூபா நட்டத்தை எதிர்க்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி,மக்கள் வங்கி ஆகிய இரு பிரதான வங்கிகள் மின்சார சபைக்கும்,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் தொடர்ந்து கடன் வழங்கி வருகின்றன. மறுபுறம் ஸ்ரீ லங்கன் எயார் லைன் நிறுவனத்திற்கும் கடன் வழங்குகின்றன.

இந்நிலைமை தொடர்ந்து நீடித்தால் இவ்விரு வங்கி கட்டமைப்பிற்கும் பாதிப்பு ஏற்படும்.தேசிய சேமிப்பு வங்கி,இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகள் அரசாங்கத்திற்கு ரில்லியன் கணக்கு கடன் வழங்கியுள்ளன.

மின்சார சபையின் நட்டத்தை குறைக்க வேண்டுமாயின் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை குறைக்க வேண்டுமாயின் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும்.எரிபொருள் உட்பட மின்கட்டணத்தின் விலை அதிகரிக்கப்படுமாயின் அது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

அனைத்து பிரச்சினைகளும் தற்போது ஒரு மையப்புள்ளியை அண்மித்து பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.பொருளாதார நெருக்கடி நூல் பந்து போல் சிக்கலடைந்துள்ளதால் அதனைப் பொறுமையுடன் அவிழ்ப்பதாலும் பிரச்சினை அல்லது வெட்டினாலும் பிரச்சினை. எதிர்வரும் மாதங்களில் பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்க்கொள்ள நேரிடும். – என்றார்.

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான 3 கோடி ரூபா பணமோசடி வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு!

முன்னாள்விளையாட்டுத்துறைஅமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அறுவருக்கு எதிராக பணமோசடி சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர்மாதம்14ஆம்திகதிவிசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்.

கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஊடாக 3 கோடி ரூபாய் பண மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நாமல் உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவேண்டும்

## நாமல் கருத்து



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல், அவர்கள் என்ன கூறுகின்றார்கள் என்பதை கண்டறிய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்களே, அப்போது பிரதமரும் வீட்டுக்குப் போக வேண்டுமா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய அவர் ’இது இன்று வந்தவை அல்ல, ஜே.ஆரை கொன்று விடுவோம் என்று பலகையை அடித்தார்கள். இதற்கு குழப்பமடையாமல் அவர்கள் ஏன் அப்படி கூறுகிறார்கள் என்பது தொடர்பில் கண்டறிய வேண்டுவதோடு, தலை வலி இருப்பவருக்கு உடம்பு வலிக்கு மருந்து கொடுத்து சரிவராது’ எனவும் குறிப்பிட்டார்.

மேலும் பிரச்சினைகளை மூடி மறைப்பதில் எவ்வித பயனும் இல்லை என்பதோடு நோய்க்கு தேவையான சிகிச்சையை அளிப்பதை விடுத்து வேறு நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் பயனில்லை என்றும் தெரிவித்தார்.

# எதிர்வரும் நாள்களில் எரிவாயு விநியோகம் வழமைக்கு வரும்!

## வர்த்தக அமைச்சர் கூறுகின்றார்

இந்திய கடனுதவி திட்டம் மற்றும் உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் எரிவாயு விநியோக பிரச்சினைக்குத் தீர்வுகாண அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் எரிவாயு விநியோகம் வழமைக்கு திரும்பும் என வர்த்தகத்துறை அமைச்சர் செஹான் சேமசிங்க கட்சி தலைவர்களிடமும், தெரிவுக் குழு உறுப்பினர்களிடமும் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற நாடாளுமன்ற விவகாரம் தொடர்பிலான தெரிவுக் குழுவிற்கு எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு விநியோக கட்டமைப்பில் காணப்படும் நெருக்கடி நிலைமை தொடர்பில் கலந்துரையாடலை முன்னெடுக்க வலுசக்தி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர,வர்த்தகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் செஹான் சேமசிங்க உட்பட அவ்விரு அமைச்சின் செயலாளர்கள் உட்பட அதிகாரிகள் அழைக்கப்பட்டனர்.

எரிபொருள் மற்றும் எரிவாயு மற்றும் மின்சாரம் ஆகிய சேவை விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கட்சி தலைவர்கள் உட்பட தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஒன்றிணைந்து எரிபொருள் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த தற்போது பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதன்போது குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோகத்தைத் தடையின்றி முன்னெடுப்பதற்கு முத்துராஜவெல முனையத்தின் நடவடிக்கைகள் 24 மணித்தியாலமும் இடம்பெறுகின்றன. நிலைமையை சீர்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்படுகிறார்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை தேசிய மின் கட்டமைப்பில் இணைத்துக்கொள்வதில் காணப்படும் பாதிப்பு தொடர்பாகத் தெரிவுக் குழுவில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. அதற்கமைய சர்வ கட்சிக்குழு ஒன்றை ஸ்தாபித்து புதுப்பிக்கத்தக்க சக்த வளங்களை விரிவுபடுத்துவது அவசியம் என தெரிவு குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அதற்குத் தேவையான சட்டத்தைத் திருத்தத்தை செய்ய எதிர்பார்ப்பதாகவும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

இந்திய கடனுதவி திட்டம் மற்றும் உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் எரிவாயு விநியோகப் பிரச்சினைக்குத் தீர்வு காண அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் எரிவாயு விநியோகம் வழமைக்கு திரும்பும் என வர்த்தகத் துறை அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மக்களின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும்!

## ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் என கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதம பீடாதிபதிகள் கூறியமை போன்று பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உடனடியாக நீக்கப்பட்டு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழகம் சென்ற இரண்டு இளைஞர்களுக்கு எதிராக போதைப்பொருள் கடத்தல் வழக்கு?

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து தமிழகம் சென்ற இரு இளைஞர்கள் மீதும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமையால், அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குருநகர் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழகம், தனுஷ்கோடியை அண்மித்த தொண்டி பகுதியில் வியாழக்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அகதிகளாகத் தமிழகத்துக்கு தஞ்சம் கோரி வந்தனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, குறித்த இருவருக்கும் எதிராக இலங்கை நீதிமன்றில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் இருவரையும் அகதிகளாக ஏற்காமல் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# நெடுந்தீவுக் கடலில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



நெடுந்தீவு கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த கடற்றொழிலாளர் ஒருவரது குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக 10 லட்சம் ரூபா வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கையை அடுத்து, கடந்த வருடம் இடம்பெற்ற, இயற்கை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த மரியவேதநாயகம் அமரலமேயன் என்பவரது குடும்பத்தினருக்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் வியாழக்கிழமை மாவட்ட கடற்றொழில் பணிப்பாளர் சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இழப்பீடு வழங்கும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பாக, கடற்றொழில் அமைச்சரின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்னன் இழப்பீட்டுக்கான காசோலையை அனர்த்தத்தில் உயிரிழந்த அமரலமேயனின் தந்தையிடம் வழங்கி வைத்தார்.

இதன்போது, ஈ.பி.டி.பி. கட்சியின் நெடுந்தீவு பிரதேச நிர்வாக பொறுப்பாளர் முரளி, நெடுந்தீவு பிரதேச கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘கோ ஹோம் கோட்டா 2022’ முகப்புத்தக பக்க நிர்வாகியின் பயணத் தடை நீக்கம்!

சமூக ஊடக செயற்பாட்டாளரும் ‘கோ ஹோம் கோட்டா 2022’ எனும் முகப்புத்தக பக்கத்தின் நிர்வாகியுமான திசர அநுரத்த பண்டாரவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

அண்மையில் மிரிஹானையில் ஜனாதிபதியின் இல்லத்துக்கு அருகே இடம்பெற்ற பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து, ஏப்ரல் 2 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் அரசு தொடர்பில் பொது மக்களிடையே விரோதத்தை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டார் எனக் கூறி திசர அநுரத்த பண்டார கைது செய்யப்பட்டிருந்தார்.

தண்டனை சட்டக் கோவையின் 120 ஆவது அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்தார் எனக் கூறி கைது செய்யப்பட்ட அவர், கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த பிணை நிபந்தனைகளில் ஒன்றாக அவரது வெளிநாட்டு பயணம் தடை செய்யப்பட்டது.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பான வழக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா முன்னிலையில் மீள விசாரணைக்கு வந்தது. இதன் போது அநுரத்த பண்டாரவுக்காக ஆஜரான சட்டத்தரணியின் கோரிக்கையை பரிசீலித்து, நீதிவான் வெளிநாட்டு பயணத் தடையை நீக்கினார்.

இது தொடர்பான வழக்கு மீள மே 31 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

# நாட்டில் எரிபொருள்களுக்கு நெருக்கடி நிலைமை: அதிபர், ஆசிரியர்களின் நியமனங்களிலும் தாக்கம்!

## கல்வி அமைச்சின் செயலாளர் முன்வைத்துள்ள யோசனை



எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அதிபர், ஆசிரியர்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் நியமனங்களைவழங்குவது சிறந்த யோசனையாகும்.

எனினும், அதனை நடைமுறைப் படுத்துவதாயின், தீர்க்கமானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு நியமனத்தை மாற்றித் தருமாறு அதிபர் மற்றும் ஆசிரியர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை உண்மையில் சிறந்த தொரு யோசனையாகும்.

எவ்வாறிருப்பினும், அதிபர், ஆசிரியர்களுக்கு மாத்திரம் அதனை செயற்படுத்த முடியாது. மாணவர்களும் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

எனவே, இது இலகுவாக நடைமுறைப் படுத்தப்படக்கூடிய விடயமல்ல. காரணம், நாட்டில் சுமார் 45 லட்சம் மாணவர்களும், 2 லட்சத்து 45 ஆயிரம் ஆசிரியர்களும் உள்ளனர்.

இவர்கள் எல்லோருக்கும் சமமான வகையில் இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்தக் கோரிக்கையை நான் நிராகரிக்கவில்லை.

நாட்டில் 10 ஆயிரத்து 155 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் இரு பாடசாலைகளில் ஒரு மாணவர் மாத்திரம் உள்ளார். அது மாத்திரமின்றி, 50 இற்குக் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள் 100, 200, 500, 1000 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என பல பாடசாலைகள் உள்ளன.

இந்த வகைப்படுத்தல்களின் அடிப்படையிலேயே மேற்கூறிய விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. எனவேதான் அது இலகுவான விடயமல்ல என்று கருதுகின்றோம். – என்றார்.

# குருந்தூர்மலை கிராம மக்களின் அபகரிப்புக்குள்ளான காணிகள்!

## சாள்ஸ் நேரில் சென்று ஆராய்வு





குருந்தூர்மலை பிரதேசத்தை அண்டிய தண்ணிமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பூர்வீக காணிகள் தொடர்பில் ஆராயும் நோக்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அந்த பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

குருந்தூர்மலை பிரதேசத்தை அண்டிய தண்ணிமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பூர்வீக காணிகள் மீள்குடியேற்றத்தின் பின்பு சில வருடங்களாக வனவள திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தன.

அத்தோடு குருந்தூர் மலையை அண்டிய சில மக்களின் காணிகளும் பயிர்ச் செய்கைக்கு குருந்தூர் மலையில் உள்ள பௌத்த பிக்குவால் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தக் காணிகள் தொடர்பில் ஆராயும் நோக்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் அந்த பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

பூர்விக காணிகளிலே தமது வாழ்வாதாரம் தங்கி இருப்பதாகவும் தமது பூர்வீக காணிகளை வன வள திணைக்களத்தினரிடம் இருந்தும் பௌத்த பிக்கு மற்றும் தொல்லியல் திணைக்களத்திடமிருந்தும் மீட்டுத் தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கவனத்துக்கு மக்கள் கொண்டு சென்றதின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் தனது கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்திருந்தார்.

அதன் பிரகாரம் கடந்த புதன்கிழமை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பிரதேசத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்,வனவள திணைக்களத்தினர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த காணி விடுவிப்பு தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர். மேலும், கையகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காணிகள் சட்டங்களுக்கு அமைவாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும் வனவள திணைக்களத்தினர் இதன்போது தெரிவித்துள்ளனர்.

காணிகளை விடுவிப்பதற்கு உரிய அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இதன்போது மக்களிடம் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் நிலைமை தொடர்பாக அமெ.காங்கிரஸ் உறுப்பினர் ஆதங்கம்



இலங்கையின் வளங்களை சூறையாடியவர்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஸ்டீவன் ஹார்ஸ்ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான ஸ்டீவன் ஹார்ஸ்ஃபோர்ட் அண்மையில் இலங்கையர்கள் சிலரை சந்தித்துப் பேசிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வளங்கள் சூறையாடப்பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பிலான தகவல்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டை ஆட்சி செய்யும் ஒரு குடும்பம் காரணமாக இலங்கை வங்குரோத்து நிலையை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பாக அமெரிக்க தலைவர்களை தெளிவுபடுத்துவதாக அவர் உறுதியளித்துள்ளார். இலங்கையின் வளங்கள் சூறையாடப்பட்டமைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை அமெரிக்க காங்கிரஸ் சபையுடன் இணைந்து அம்பலப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.



# ராஜபக்ஷவினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜெனீவாவில் குழுமினர் சிங்கள மக்கள்

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்பாக பெருமளவான சிங்கள மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டுள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இவ்வாறு அவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, காரணமாக பொதுமக்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும், எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் அந்த அந்த நாடுகளில் ஒன்று திரண்டு இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மணலின் விலையும் சடுதியாக எகிறியது

கொழும்பு, ஏப்ரல் 30

எரிபொருள் விலையேற்றம் காரணமாக மணல் கியூப் ஒன்றின் விலை 21 ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய நாள்களில் 13 ஆயிரம் ரூபாவாக இருந்த ஒரு கியூப் மணலின் விலை 21 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, போக்குவரத்துக் கட்டணம், மணல் ஏற்றிச் செல்வதற்கான வாடகை போன்றவற்றின் காரணமாகவே மணல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சாணக்கியனுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைத்த பின்னர், தனது உத்த ரவில் சில மாற்றங்களைக் களுவாஞ்சிகுடி நீதிவான் செய்த போதிலும், அவற்றில் திருப்தி இல்லை எனத் தெரிவித்து நீதிவானின் உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுமந்திரன் சொன்னார்.

பொலிஸாரின் தவறான வழிநடத்த லில் நீதிமன்றம் இவ்வாறு பிழையான உத்தரவு ஒன்றை பிடித்திருப்பதாக சுமந்திரன் குறிப்பிட்டார். அதனால் அந்த உத்தரவு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என அவர் கோரினார்.

நாடு முழுவதும் இத்தகைய ஆர்ப்பாட் டங்கள், ஊர்வலங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பிரதான எதிர்க்கட்சி கண்டி யிலிருந்து கொழும்புக்கு வீதியை மறித்து தொடர் நடைபவனி முன்னெடுக்கின்றது. நேற்று (நேற்று முன்தினம்) பல நூற்றுக் கணக்கான தொழிற்சங்கங்கள் நாடு முழுவதிலும் பரவலாக இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்தின. அலரி மாளி கைக்கு முன்னால் பல ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. அவை தொடர்பில் பொலிஸார் முன்வைத்த எந்த விண்ணப் பங்களையும் கொழும்பு நீதிவான் ஏற்கவில்லை. நிராகரித்துவிட்டார். அதனால் களுவாஞ்சிகுடி நீதிவானின் உத்தரவு தவறானது என நாம் கருதுகிறோம். எனவே, அதற்கு எதிராக அடுத்த மேன் நிலை நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து நாம் உத்தரவை திருத்துவோம். – என்று நேற்று களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்ற விசாரணையின் பின்னர் சுமந்திரன்

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**கேள்வி:-** தமிழில் தேசியகீதம் பாடப்பட்டமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** தேசியகீதம் எந்த மொழியில் பாடப்படுகிறது என்பது அல்ல பிரச்சினை. தேசம் ஒருமைப்பட்டு நிற்கவேண்டும், அதுதான் முக்கியம். தேசியகீதத்தை வைத்துத் தேசத்திற்குள் பகை வளர்க்க நினைத்தது கீழ்மையிலும் கீழ்மை! அன்று தமிழில் தேசியகீதம் பாடப்பட்டபோது எதிர்ப்புத் தெரிவித்த பௌத்த பிக்கு தன் மனத்துள் இருக்கும் இனப்பகையை மறைத்து, தங்களுக்குச் சார்பான ஒரு நியாயத்தைச் சொன்னார். இந்தியாவில் பலமொழிகள் பேசப்பட்டாலும், அங்கு ஒரே மொழியில்த்தான் தேசியகீதம் பாடப்படுகிறது என்பதுதான் அவர் சொன்ன நியாயம்.

சரி போலத் தோன்றும் அந்த பொய்மையான வாதத்தை முன்வைத்து, தனது நோக்கத்தை நிறைவேற்ற முனைந்தார் அந்த பிக்கு. முன்பும் பலதரம் இதே கருத்தையே இனவாதிகள் பலர் முன்வைத்திருந்தனர். ஏதோ இந்தியாவைப் பின்பற்றித்தான் அனைத்தையும் தாங்கள் செய்வதுபோல, அவர் உரைத்த வாதம் நகைப்புக்கிடமானது. அவர்கள் சொல்வது உண்மையானால் இந்தியாவைப் பின்பற்றி மாநில சுயாட்சியையும் முழுமையாய் இங்கு வழங்கலாமே என மற்றவர்கள் கேட்பார்கள் என்பது கூட அவருக்குப் புரியவில்லை.

இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அதனால் தான் அவர்களுக்கு ஏதோ ஒரு மொழியில் மட்டும் தேசியகீதம் பாடவேண்டிய தேவை ஏற்பட்டது. இங்கு அப்படி இல்லையே. இருப்பது இரண்டே இரண்டு மொழிகள்தான். அவற்றுள் ஒரு மொழியில் பாடினால் மற்ற மொழி ஒதுக்கப்பட்டதாக ஆகிவிடும். அதனால்தான் இங்கு இரண்டு மொழிகளிலும் தேசியகீதம் பாடும் முறைமை ஏற்பட்டது. அதுதவிர பல நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேசியகீதம் பாடும் முறைமையும் இன்றுவரை இருந்து வருகிறது.

அந்தப் பிக்குவுக்கு அங்கிருந்த இளைஞர்கள் தக்கபடி பதிலளித்தார்கள். இந்தியாவில் தேசியகீதத்தை அங்குள்ள சிறுபான்மையினரின் மொழியான வங்காள மொழியில்தான் பாடுகிறார்கள். நீங்களும் அதைப் பின்பற்றத் தயாரா? என அவ் இளைஞர்கள் கேட்டது பிக்குவுக்கு விழுந்த 'நெற்றியடி.'

தேச மக்கள் ஒன்றுபட்டு, ஒற்றுமையாய் வாழ்வதுதான் நோக்கம் என்றால், இரண்டென்ன இருபது மொழிகளிலும் தேசிய கீதத்தைப் பாடலாம் என்பதுதான் எனது அபிப்பிராயம். அன்று அங்கு இனவாதம் என்னும் விஷ விருட்சத்தை நாட்டப் பார்த்தார் அந்தப் பிக்கு. அவர் நாட்ட நினைத்த அவ் வி விருட்சத்தைத் தமிழ் இளைஞர்களோடு சிங்கள இளைஞர்களும் இணைந்து பிடுங்கி எறிந்தமை கண்டு இலங்கை அன்னை மகிழ்ந்திருப்பாள் என்பது மட்டும் நிச்சயம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஒற்றுமை தேவை என்றால் 'நமோ நமோ அம்மே' என்று கூடப் பாடலாம். எப்படி நம்ம 'ஐடியா' ஹி... ஹி..**

**கேள்வி:-** இதுவரை எல்லாப் போராட்டங்களிலும் முரண்பட்டுக் கொண்டிருந்த கஜேந்திரகுமார் அணியினர் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எல்லோரையும் முந்திக்கொண்டு ஓடிப்போய்க் கையொப்பமிட்டிருக்கிறார்களே. பார்த்தீர்களா?

**பதில் :-** இதுவரை விட்டதைப் பிடிக்க நினைக்கிறார்கள் போல. யார் கண்டது? இந்த அரசு கவிழ்ந்து புதிய அரசு வந்தால், அது 'ஒரு நாட்டிற்குள் இருதேசங்கள்' என்ற இவர்களது கொள்கையை அங்கீகரிக்கும் என யாரேனும் சொன்னார்களோ என்னவோ? நெஞ்சிலிருந்து கொள்கைப் பிரகடனங்களை அறிவிப்போர் பற்றித்தான் நாங்கள் ஆராய வேண்டும். வாயிலிருந்து அதனை அறிவிப்போர் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. இலட்சியங்களைக் கற்பனையாய் எப்படியும் பேசலாம். அது கவர்ச்சியாய் மட்டும்தான் இருக்கும். அந்த இலட்சியத்தை அடையும் வழியை யதார்த்தமாயும் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவர்களை நம்பி மக்கள் பின்செல்லலாம். 'ஒரு நாட்டிற்குள் இரு தேசங்கள்' என்ற அவர்களது கொள்கைப் பிரகடனம் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்களே தவிர, அதை எப்படிச் சாத்தியப்படுத்துவோம் என்பது பற்றி மூச்சும் விடுகிறார்கள் இல்லை. கையொப்ப விடயத்தில் கூட்டமைப்புக் காட்டும் நிதானம் சரியானதென்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * என்ர தமிழ் வாத்தியார் தேசம், நாடு என்பவை ஒத்த கருத்துள்ளசொற்கள் என்றுதான் சொல்லித்தந்தவர். இவர்கள் நாட்டுக்குள்ள தேசம் என்கிறார்கள். சத்தியமா அது என்ன என்று எனக்கு விளங்கேல்ல...உங்களுக்கு?**

**கேள்வி:-** பெருந்தொகையான பணத்தைக் களவாகக் கப்பலிலும் விமானத்திலும் கொண்டு சென்றிருக்கிறார்களாமே?

**பதில் :-** செய்தி உண்மையோ, பொய்யோ தெரியாது. அதனால் அதுபற்றிக் கருத்துரைக்கத் தயக்கமாய் இருக்கிறது. அச்செய்தி உண்மையாய் இருக்கும் வாய்ப்பு அதிகம் என்பதால் அதுபற்றிச் சில சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

செல்வத்தை'இலட்சுமி'என்பார்கள் தமிழர்கள். அது இந்துக்கள் சொல்வதல்லவா என்பீர்கள். மதம் சாராமல் நூல் செய்தவர் என்று பலராலும் சொல்லப்படுகின்ற (எனக்கு அக்கருத்தில் உடன்பாடில்லை) வள்ளுவரே செல்வத்தின் அதிபதியாக இலட்சுமியை பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார். எனவேதான் அதனைத் தமிழர்களின் கருத்தாய் உரைத்தேன்.

மகாலட்சுமி மற்றவர்களால் விரும்பப்படுகிறவள், போற்றப்படுகிறவள், மதிக்கப்படுகிறவள். அப்படிப்பட்ட மகாலட்சுமியை மறைத்தும் ஒழித்தும் கடத்திச் செல்வது என்பது அந்த செல்வத்திற்கே செய்யப்படும் இழுக்காகும். இதோ! என் செல்வம் என்று பகிரங்கமாய் மற்றவர்களுக்குக் காட்டமுடியாத செல்வம், இருந்தால் என்ன? இல்லாமல் விட்டால் என்ன? 'களவினால் ஆகிய ஆக்கத்தை' எங்கு கொண்டு சென்றாலும் கண்ணியப்படுத்தமுடியாது. பாவம் தாமும் மானங்கெட்டு மகாலட்சுமியையும் மானங்கெட வைக்கிறார்கள் இவர்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இலட்சுமிட்ட செய்யிற இந்த விளையாட்டையெல்லாம் சரஸ்வதியிட்டச் செய்ய முடியாதுங்கோவ்...!**

**கேள்வி:-** நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் ஒரு வருடத்திற்கு நாட்டைத் தம்மிடம் தந்து பாருங்கள் அதனை நிமிர்த்திக் காட்டுகிறோம் என்று அறிக்கை விட்டிருக்கிறாராமே?

**பதில்:-** கூட்டமைப்புத் தலைவர்களில் பலருக்கு வரவர நகைச்சுவை உணர்வு அதிகரித்துக் கொண்டே போகிறது. நொந்துகிடக்கிற சிங்கள இனவாதிகளைக் கிண்டிப் பார்ப்பதற்காக அப்படிச் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். நம் தமிழ்த் தலைவர்களின் தகுதியை அறியாத அளவிற்கு அவர் ஒன்றும் முட்டாள் இல்லையாக்கும். தரப்பட்ட முதலமைச்சர் பதவியை வைத்துத் தமிழர் பிரதேசத்தை நம் தலைவர்கள் நிமிர்த்திய அழகை அதற்குள் அவர் மறந்திருப்பாரா என்ன? இப்படி ஏதாவது அறிக்கை விட்டால்தான் நம் மக்களிடம் கைதட்டு வாங்கலாம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது. அந்த அளவில் அவர் புத்திசாலிதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * நல்லகாலம் 'உக்ரேனை' எங்களிடம் ஒப்படையுங்கள். நாம் ரஷ்யாவை வென்றுகாட்டுகிறோம் என்று சொல்லாமல் விட்டார். இது உங்களுக்கே கொஞ்சம் 'ஓவராய்த்' தெரியேல்லையோ சேர்?**

**கேள்வி:-** அரசுக்கெதிரான பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சியைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பிரதமரின் இல்லத்தையே ஆட்டி அசைத்து விட்டார்கள். அக் காட்சியைப் பார்க்க எனக்கே பதற்றமாக இருந்தது. தொடர்ந்து நாடு முழுவதும் மக்கள் கொந்தளித்துத் தள்ளுகிறார்கள். 'கோத்தா **Go Home**' என்றும், 'கோத்தா பிஸ்ஸ்' என்றும் எழும் கோஷங்கள், நாட்டையே அதிரச் செய்கின்றன. பத்துப் பதினைந்து தினங்களாக இந்தச் சத்தங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு எப்படித்தான் உள்ளே அடைந்து கிடக்கிறார்களோ தெரியவில்லை. 'மேதகு' என்ற கௌரவப் பிரயோகத்திற்குப் பெரும் மாசு ஏற்படுத்தி விட்டார்கள். மானம் போயே போய்விட்டது. இதற்குமேல் எதனைச் சாதிக்க விரும்புகிறார்களோ தெரியவில்லை. எவ்வளவு சீக்கிரம் பதவியிலிருந்து இறங்குகிறார்களோ, அந்தளவில் போய்க் கொண்டிருக்கும் மானத்தைக் கொஞ்சமாவது காப்பாற்றிக் கொள்ளலாம். 'நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ' எனும் இவர்களின் வீம்பு தேசத்தை இரத்தச் சகதியாக்கி விடுமோ என அஞ்சவேண்டியிருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் என்னத்தையும் சொல்லட்டும். நாலுபேர் ஒண்டாவந்து கதவைத் தட்டினாலே நமக்குக் 'குலை' நடுங்குது. இத்தனை ஆயிரம் பொடியள் தட்டவும் அசையாமல் இருக்கிறார்கள் எண்டால் 'சீமான்கள்' கெட்டிக்காரர்தான். (நம்ம அபிப்பிராயம் எப்பூ..பூ..பூ..டி)**

**கேள்வி:-** மீண்டும் தர்மம் வெல்லும் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** என்றைக்கு அது தோற்றது? இனி வெல்ல.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரே! சூரபத்மன், இரணியன் போன்றோர் பெற்ற வெற்றியைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்? (நான் ஆர்? சிங்கத்தை மடக்கிய சிங்கமாக்கும். ஹி.. ஹி..)**

**கேள்வி:-** இந்த வாங்கு வாங்குகிறீர்களே. வேலன் சாமியார் மீது உங்களுக்கு அப்படி என்னதான் கோபம்? துறவியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதுதான் உங்கள் கருத்தா? முன்பு நீட்டியவரையும் உங்களுக்குப் பிடிக்கவில்லை. இப்போது மழித்தவரையும் உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களுக்கு என்னதான் பிரச்சினை?

**பதில்:-** என்ன? சண்டை மூட்டப் பார்க்கிறீர்களா? வேலன் சாமியார்(?) ஆரம்பத்தில் சில நாள்கள் எனது திருக்குறள் மாணவராய் இருந்திருக்கிறார். ஆசிரியனுக்குத் தன் மாணவனைப் பிடிக்காமல் போகுமா? அந்த உறவுரிமை பற்றித்தான் என் கண்டனங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

துறவிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று நான் சொல்லமாட்டேன். தமிழர்கள் துறவியர்களை முன்னிறுத்தித்தான் தமது சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். அதனால்தான் திருவள்ளுவர் தமது நூலின் பாயிரத்திலேயே 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத்தை வைத்தார். வள்ளுவர் அப்படி துறவியரை முன் வைத்து அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை உரைத்ததற்கு ஓர் காரணம் இருக்கிறது. விருப்பு, வெறுப்பற்ற துறவியர்தான் பற்றற்று, நடுநிலைமையாய் நின்று, உண்மை கூறி சமூகத்தை வழிநடத்துவார்கள் என்பதே அக்காரணம். துறவியரின் வழிகாட்டுதலில்தான் சமூகத்தில் அன்பும் ஒற்றுமையும் விருத்தியாகும் என்று வள்ளுவர் நினைத்திருப்பார் போல.

வேலன் சாமியார் மேற்சொன்ன இலட்சணங்களோடு இயங்குகிறார் இல்லை என்பதனால்தான் எனக்குக் கோபம் வருகிறது. அவரது கருத்துக்களில் நடுவுநிலைமை இல்லை. அளவுக்கதிகமான பாரபட்சம் இருக்கிறது. தமிழ் மக்களைக் கவரவேண்டும் என்பதற்காக வெறுப்பை அள்ளி உமிழ்கிறார். மக்களிடமும் அவ்வெறுப்புணர்ச்சியைத் தூண்டுகிறார். அரசியல் சார்ந்த கருத்துக்களிலும் துளியளவேனும் தீர்க்கதரிசனம் இல்லை. இவைதான் அவர் மீதான எனது கோபத்தின் காரணங்கள்.

அவர், துறவியாய் அரசியலில் ஈடுபடுவதாய்த் தெரியவில்லை. தமிழ்த் தீவிரவாதியாய்த்தான் தன்னைக் காட்டிக் கொள்ள முயல்கிறார். அதனால் இனப்பகை இன்னும் வளரப் போகிறது. அதைச் செய்ய ஒரு துறவி தேவையில்லை.

(09ஆம் பக்கம் பார்க்க)

# அரசிலிருந்து திமிங்கிலங்கள் வெளியேறும் நேரத்தில் பேத்தை போன்று முஷாரப் ஒட்டிக்கொண்டிருக்கிறார்!

## சரியான நேரத்தில் தக்க பாடம் கற்பிக்கப்படும் ம.கா.உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் காட்டம்



(நூருல் ஹுதா உமர்)

அமைச்சர் பதவி கிடைத்தால் அந்த பிரதேச மக்கள் கொண்டாடுவார்கள். ஆனால் இங்கு அந்த தினம் துக்க தினமாக இருக்கிறது. அரசியல் சூறாவளியில் பெரிய பெரிய அரசியல் திமிங்கிலங்கள் மொட்டு கடலிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் எங்கள் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பேத்தை போன்று மொட்டில் ஒட்டிக்கொண்டிருக்கிறார். அவரது பொய்யான மாயையை மக்கள் இனியும் நம்பத் தயாரில்லை. பொத்துவில் மக்கள் உட்பட அம்பாறை மாவட்ட மக்கள் எதிர்காலத்தில் தக்க பாடத்தை முஷாரப்பிற்கு கற்பிற்கத் தயாராக உள்ளார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பிலான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

பொத்துவில் தனியார் விடுதியில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிரியர் ஏ.எம்.எம். தாஜுதீன், என்.எச்.முனாஸ் மக்கள் காங்கிரஸின் வட்டார அமைப்பாளர்களான ஏ.எல். மனாப், அலாவுதீன் அப்துல்லாஹ் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அம்பாறை மாவட்ட சகல பிரதேசங்களினதும் மக்களின் ஒத்துழைப்புடன் பொத்துவில் மக்களின் கணிசமான ஆதரவுடன் மண்ணின் தாகத்தைத் தீர்க்க உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்புரிமை இன்று வாக்களித்த மக்களுக்கு தலைகுனிவை உண்டாக்கும் விதமாக நடந்து கொள்கிறது. நாட்டினதும், நாட்டு மக்களினதும் அபிலாஷைகளை மறந்து தன்னுடைய சொந்தத் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து சுயநல போக்குடன் எங்கள் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் செயற்படுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப், தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினராக பதவிவகித்த இந்த இரண்டு வருடங்களில் எமது நாட்டுக்கோ, மாவட்டத்துக்கோ அல்லது பொத்துவில் பிரதேசத்துக்கோ எந்தவித சேவைகளையும் பெறவுமில்லை. உரிமைகளை பெற்றுத்தரவுமில்லை. 2022 ஆண்டின் சிறந்த பொய் மூடையாகவும், வெற்றுப்போத்தலாகவுமே அவர் அரசியலில் உலாவருகிறார். சமூக வலைத்தளங்களில் மட்டும் நிறைய பொய்களை அவிழ்த்துவிட்டிருக்கும் அவர், மக்கள் காங்கிரஸ் சார்பில் பொத்துவிலுக்கு செய்திருக்கும் ஒரு நல்ல விடயம் என்ன ? பல ஆயிரம் காணி விடுவிப்பு தொடர்பிலும், பொத்துவில் கல்வி வலய உருவாக்கம் தொடர்பிலும், முகுதுமலை விடயம் தொடர்பிலும், பொத்துவிலுக்கான ஒசுசல தொடர்பிலும் இன்னும் பல விடயங்கள் தொடர்பிலும் சமூக வலைத்தளங்களில் மட்டுமே படம் காட்டிக் கொண்டிருக்கிறார். விடயங்கள் எதுவும் நடக்கவில்லை.

113 ஆதரவை பெற அரசு தடுமாறிக்கொண்டிருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி பொத்துவிலுக்கும், அவருக்கு வாக்களித்த அம்பாறை மாவட்ட மக்களுக்கும், முஸ்லிம் சமூகத்துக்கும் நிறைய விடயங்களை சாதித்திருக்க முடியும். ஆனால் அவர் சுகபோகங்களை மட்டுமே பெற்றுக்கொண்டிருக்கிறார். அவரின் இராஜாங்க அமைச்சுப்பதவி மரணிக்கும் தருவாயில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. காணிப்பிரச்சினைகள், கல்விவலய உருவாக்கம் போன்ற பொத்துவில் மக்கள் அவரை நாடாளுமன்றம் அனுப்பிய பிரச்சினைகளைத் தீர்க்கக் கிடைத்த சரியான வாய்ப்பையும் அவர் சுயநலத்துக்காகத் தவறவிட்டுள்ளார். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை உண்டியலில் சேர்த்த பணம் முதல் செருப்பு வாங்க வைத்திருந்த பணம் வரை கொடுத்து அரசியல் செய்தது இவர் சுகபோகம் அனுபவிக்கவா? கோடிக்கணக்கான கடனுடன் அரசியலுக்கு வந்தவர் தனது கடன்களை அடைத்து கொள்வதற்காகவும் இன்று சுகபோகங்களுக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் பலிகொடுத்துள்ளார்.

அவரது பாணியில் நாங்கள் கேட்பதாக இருந்தால் அவர் இப்போது மொட்டா அல்லது மயிலா என்றுதான் கேட்க வேண்டும். அன்று கூடாது என்ற மொட்டு இன்று எப்படி கூடுமானது? மாணிக்க கல் விற்று யாரும் கடன் காரனாகவில்லை. அவர் சிங்கப்பூர், கோலாலம்பூர் போன்ற வெளிநாடுகளில் என்ன விளையாடினார். எதனால் கடன்காரரானார் என்பதெல்லாம் எங்களுக்கு ஆதாரத்துடன் வெளிப்படுத்த முடியும். தொழிலொன்றுமில்லாது இருந்தவரை இரக்கத்துடன் நோக்கிய மக்கள் காங்கிரஸ் தலைவர் அவருக்கு சகல சொகுசுகளையும் வழங்கி கௌரவப்படுத்தினார். அது போன்றே பொத்துவில் மண்ணையும் கௌரவப்படுத்தி 50 வீட்டுத்திட்டம், கல்வி, பள்ளிவாசல்கள் என எல்லாத்துறைகளுக்கும் நிறைய உதவிகள் செய்துள்ளார்.

இப்படியான தலைவரை சத்தியம் செய்ய அழைக்கும் முஷாரப், சத்தியமிடுவது எப்படி என்பதை எல்லோரும் அறிவர். அவர் செய்த சத்தியங்கள் இன்றும் மக்கள் மத்தியில் இருக்கின்றன. முன்னாள் தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாசித்தை வீழ்த்தி புதிய தவிசாளராக நியமிப்பேன் என்று வழங்கிய வாக்குறுதிகளும் சத்தியமும் இன்னும் நிறைவேறாமல் இருக்கின்றது. பொத்துவில் மக்களுக்கு தேவைகளின் போது உதவிய நிந்தவூர் தவிசாளரை கூட அவமதித்து நடந்தவரே இவர். இப்படியான துரோகியை கட்சியை விட்டு அடியோடு விலக்க வேண்டும். என்றனர். இந்த ஊடக. சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதேச முக்கி

## யாழில் தொடர்ந்து திருட்டில் ஈடுபட்ட இளைஞர்கள் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம் மாநகரில் வெவ்வேறு நான்கு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வியாழக்கிழமை இளைஞர் ஒருவரிடம் 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கையடக்க தொலைபேசியை அபகரித்துச் சென்ற நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் 3 வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் அபகரிக்கப்பட்டன. நூதனமான முறையில் இளைஞர்களை மறித்து தமது சகோதரியுடன் கதைப்பதாகவும் அவருடைய படத்தை பணப்பையில் (பேஸில்) வைத்திருப்பதாகவும் அச்சுறுத்திவிட்டு அவர்களிடமிருந்து அலைபேசி மற்றும் பணத்தை அபகரித்து கும்பல் தப்பித்து வந்துள்ளது.

இந்த நிலையில் 4ஆவது சம்பவமாக யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இளைஞர் ஒருவரை அதே பாணியில் அச்சுறுத்தி 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை இருவர் அபகரித்துச் சென்றனர். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

## மக்களின் எதிர்ப்புப் போராட்டம் நியாயமானது என்கிறார் ரஞ்சன்



மக்களின் போராட்டம் நியாயமானது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றில் தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன், ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை ஒன்றுக்காக வருகை தந்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் சென்ற போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எரிவாயு, எரிபொருள் என பல்வேறு பொருள்களுக்குத் தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நியாயமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். போராட்டத்தை முன்னெடுத்து வரும் இளைஞர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார். போராட்டத்துக்குத் தடை ஏற்படுத்தக் கூடாது எனவும் அவர் கோரியுள்ளார்.

## மீன்களின் விலைகளும் வடக்கில் அதிகரிப்பு!



எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் வடமாகாணத்தில் கடல் மீன்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய கடற்பரப்புகளில் நாளாந்தம் மீன்பிடித்தல் இடம்பெற்று வருகின்ற போதிலும், கடந்த சில நாள்களாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மீன்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், கடற்தொழிலாளர்களுக்கு எரிபொருளுக்கு அதிக பணம் செலுத்த நேரிடுவதன் காரணமாக மீன்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன எனக் கடற்றொழில் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதிகமாக விற்பனையாகும் மீன்கள் 2 ஆயிரம் ரூபாவை எட்டியுள்ளதாகவும், இறால் மற்றும் நண்டு 1600 – 1800 ரூபாவுக்கு இடைப்பட்ட விலைகளில் விற்பனை செய்ய நேரிட்டுள்ளதாகவும் மீன் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த மீன்கள் இதற்கு முன்பு ஒரு கிலோ 700 ரூபா முதல் 1, 000 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலையில் இரட்டிப்பு விலை அதிகரிப்பு என்பது தாங்கிக் கொள்ள முடியாததெனவும் வட மாகாண மக்கள் தெரிவித்துள்ளனர்.

# தொழிற்சங்க போராட்டத்தில் சீன மொழியில் வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகை



வவுனியாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொள் ளப்பட்ட ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்க போராட்டத்தின்போது சீன மொழியில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையை தாங்கியவாறு போராட்டப் பேரணியில் கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்துள்ளது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி பதாகைகளை தாங்கியவாறு போராட்டம் மேற்கொண்ட மக்கள் சீன மொழியையும் தாங்கி பதாகைகளுடன் போராட்டத்தை மேற்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்துள்ளது.

நாடளாவிய ரீதியாக இடம்பெற்றுவரும் போராட்டம் வவுனியாவிலும் முழு அளவில் இடம்பெற்று வருவதுடன் ஒன்றிணைந்த கூட்டுத் தொழிற்சங்கம் போராட்டம் மற்றும் பேரணிகளையும் முன்னெடுத்து வந்தமை அவதானிக்க முடிந்துள்ளது.

## எந்தவொரு பிரேரணையிலும் கையொப்பமிடப் போவதில்லை

### குமார வெல்கம திட்டவட்டம்



நம்பிக்கையில்லா பிரேரணை அல்லது இடைக்கால அரசாங்கம் தொடர்பான எந்தவொரு பிரேரணையிலும் கையொப்பமிடப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள விசேட கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாடாளுமன்றத்தின் தலையீட்டுடன் விரைவாக அமுல்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டு 7 முன்மொழிவுகள் சபாநாயகருக்கு குறித்த கடிதத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 550 கோடி ரூபா மருந்துகள் இலங்கையை வந்தடைந்தன

சுமார் 550 கோடி ரூபாய் (16 வட்சம் அமெரிக்க டொலர்கள்) பெறுமதியான மருத்துவப் பொருள்களை இந்தோனேசியா இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அதன்படி, குறித்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொகை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் சுகாதார அமைச்சர் கலாநிதி சன்ன ஜயசுமன அவற்றை பெற்றுக் கொண்டுள்ளார்.

## வாய், மூக்கு, தாடை சத்திர சிகிச்சைகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப். 30

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முதன் முதலாக வாய், மூக்கு, தாடை சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி சுகந்தன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்று மேற்படி சிகிச்சைகளை பெற்று வந்த பொதுமக்கள் இனிவரும்காலங்களில் குறித்த சிகிச்சைகளை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வந்த வாய், முகம், தாடை விசேட வைத்திய நிபுணர் மா. தவராஜாவால் மேற்படி சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நன்கொடையாளர்களின் உதவிகளை எதிர்பார்ப்பதாக மத்தியவங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவதால் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை குறைக்கும் வகையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் நன்கொடையாளர்களின் உதவியை எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இத்தகைய நன்கொடைகள் மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அன்னியச் செலாவணி பெறுபேறுகளைப் பேணுவதற்கும் அவற்றை வெளிப்படைத் தன்மையில் பயன்படுத்துவதற்கும் மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றையும் மத்திய வங்கியின் ஆளுநர் நியமித்துள்ளார்.

நன்கொடைகள் பற்றிய தகவல்களை fdacc@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது 076 83 15 782 என்ற இலக்கத் துக்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு திரிபோஷா உற்பத்தி நிறுத்தம்!

மூலப்பொருள்கள் பற்றாக்குறையால் திரிபோஷா உற்பத்தி மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தால் திரிபோஷா விநியோகம் செய்யப்படுவதில்லை யென குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் திரிபோ இன்மையால் சிறுவர்கள் போசாக்கின்மைக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் சில மாதங்களில் மட்டுமே தமக்கு திரிபோஷா கிடைத்ததாக அப்பகுதி கர்ப்பிணித் தாய்மார்கள் குற்றம் சுமத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாட்டும் நானே? ....

(07ஆம் பக்கம் பார்க்க)

அதற்குத்தான் நம் அரசியல்வாதிகள் இருக்கிறார்களே! அது போதாதா? இதனைத்தான் பௌத்த பிக்குகளும் செய்கிறார்கள். அதனையே ஆழும் மிகுந்த நமது இந்து மதத்தின் சார்பான துறவு வேடம் பூண்ட ஒருவரும் செய்யலாமா என்பதுதான் எனது ஆதங்கம்.

பகையை நீக்கத்தான் துறவி வேண்டும். பகையை வளர்க்கத் துறவி எதற்கு? இவர் நம் தமிழ்த் தலைவர்களை விட மோசமாக நம் இனத்தைப் பிழையாக வழிநடத்தப் பார்க்கிறார். நம் மக்கள் மத்தியில் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் அவர் இங்ஙனமாய் நடக்கிறார் என்று நினைக்கிறேன். யார் கண்டது? அவரது இந்தப் போக்கால், உணர்ச்சிவசப்பட்ட நம் மக்கள் வெகு சீக்கிரம் அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நீங்கள் சொன்ன முன்னவரும் இப்படித்தான் மக்களைக் கிளப்பிவிட்டு பயன்பெற்றார்.

சில காலங்களிற்கு முன்பு வேலன் சாமியார் காட்டிய ஆன்மீக முகத்திற்கும் இப்போது அவர் காட்டும் அரசியல் முகத்திற்கும் சிறிதும் தொடர்பு இருப்பதாய்த் தெரியவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ப 'நிலையில் திரிந்து' நிற்கும் அவர்மேல் கோபப்படாமல் எப்படி இருப்பதாம்?

நீட்டியவர் என்று யாரைச் சொல்கிறீர்கள் என்பது தெரிகிறது. அவரவர் விடும் பிழைகளை, காரணத்தோடு தெளிவாய் நான் எடுத்துச் சொல்ல அதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தாடியிலும் மொட்டையிலும் நான் பகை காட்டுவதாய்ச் சொல்லி திசை திருப்பும் உங்களைப் போன்றவர்கள் இருக்கும் வரையும் எங்கள் இனம் உருப்படுவது கொஞ்சம் கஷ்டம்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அரைத் துறவியார் முழுத்துறவியாரில் குற்றம் சொல்கிறார். ஹி..ஹி..**

## மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக மக்களின் கருத்துக்களை பெற நடவடிக்கை!

அரசாங்கத்தின் கொள்கையைப் பெற்றவுடன் மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பாக பொதுமக்களிடம் கருத்துக் கோரப்படவுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையால் முன்மொழியப்பட்டுள்ள விலை அதிகரிப்புக்கான திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கையை அண்மையில் கேட்டறிந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீர் மின் பற்றாக்குறையால் அதிக எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் ஓர் அலகு மின்சாரத்துக்கான செலவு அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஓர் அலகு மின்சாரத்துக்கு 53 ரூபாவை செலவழித்த போதிலும், நுகர்வோர் ஒருவருக்கு 16 ரூபாவே அறவிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், கடந்த 8 வருடங்களாக மின்சார கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கொழும்பு அரசியலில் என்ன நடக்கிறது?

- ஆர்.சிவராஜா -
(ஆசிரியர் - 'தமிழன்' பத்திரிகை)

ஆளுந்தரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை ஜனாதிபதி ஒத்தி வைப்பார் என்று நேற்றே விடிகாலையே கூறியிருந்தேன். அதன்படி நேற்று



சுயாதீனமாகச் செயற்படும் ஆளுங்கட்சி அரசியல் தலைவர்களை மட்டுமே ஜனாதிபதி சந்தித்தார்.

சகலரையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தை அமைக்கத் தயார் எனவும், ஆனால் பிரதமரைப் பதவியில் இருந்து நீக்க முடியாது எனவும், அவ்வாறு செய்வது நாட்டைச் சீர்குலைத்துப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றைய கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அரசுடன் இணைந்து செயற்படும் 11 சுயாதீன கட்சிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமரை நீக்கினால் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய சர்வதேச உதவிகள் கிடைக்காமல் போகும் அபாயம் காணப்படுவதாக ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு, அது எப்படி இருக்க வேண்டும், அதன் உள்ளடக்கம் என்ன, அமைச்சர்கள் யார், போன்ற ஒட்டுமொத்தத் திட்டத்தையும் தன்னிடம் முன்வைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் கோரியுள்ளார்.

எவ்வாறாயினும், பிரதமரையும் அரசாங்கத்தையும் மாற்றி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எம்.பிக்கள் விமல் வீரவன்ஸ, விஜயதாஷ ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது பிரச்சினையல்ல. எனினும் பிரதமரை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து விளக்கமளிக்க ஜனாதிபதி நிதி அமைச்சர் அலி சப்ரியையும் இந்தக் கூட்டத்திற்கு அழைத்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் கடுமையான நிதி நெருக்கடி குறித்து அலி சப்ரி, இங்கு விரிவாக சுட்டிக்காட்டினார். எதிர்காலத்தில் நாடு இன்னும் கடுமையான பொருளாதார விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிமூலம் அரசாங்கத்துடன் இணைந்து, அமைச்சுப் பதவிகளைப் பெற்ற சுரேன் ராகவன் மற்றும் சாந்த பண்டார ஆகியோரின் அமைச்சுக்களையாவது நீக்குமாறு இங்கு தயாசிறி ஜயசேகர ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையினை ஏற்க மறுத்துள்ள ஜனாதிபதி, அவ்வாறு செய்வது தனது நம்பகத் தன்மைக்குக் குந்தகம் விளைவிக்கும் என வும் தெரிவித்துள்ளார்.



சுயாதீன குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் துமிந்த திஸாநாயக்க, சந் திம வீரக்கொடி மற்றும் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கலந்துரையாடலைப் புறக்கணித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் இருந்து வெளியே வந்த மைத்ரி, ஊடகங்களிடம் பேசுகையில் இடைக்கால அரசு குறித்தும் புதிய பிரதமர் நியமனம் குறித்தும் சொன்னாரே அவற்றில் உண்மையில்லையா என்று நீங்கள் கேட்கலாம். பெரும்பாலும் அதில் உண்மை இல்லை என்பதுதான் உண்மை..

மஹிந்த தன்னிடம் 117 பேருக்கு மேற்பட்டோர் இருப்பதாக சொல்கிறார். நீங்கள் 113 பேரையாவது காட்ட வேண்டாமா? அப்படி காட்டாமல் பிரதமரை நீக்குங்கள், இடைக்கால அரசை அமையுங்கள் என்று நீங்கள் கூறுவது முறையில்லை. என்னால் அப்படி செய்ய முடியாது. என்றே ஜனாதிபதி மேற்படி சுயாதீன எம்.பிக்களிடம் கூறியிருக்கிறார்.



அப்படியானால் மைத்திரிபால சிறிசேன வெளியே வந்து இப்படிக்கூற காரணம் என்ன என்று நீங்கள் கேட்கலாம்.

இப்போதுள்ள நிலைமையில் பிரதமரும், ஜனாதிபதியும் அடிக்கடி சந்திப்பதோ அல்லது தொலைபேசியில் பேசுவதோ இல்லை. எனவே நேற்றுப் பிரதமரை மாற்றமாட்டேன் எனக்கூறிய ஜனாதிபதி இன்று மாற்றுவேன் எனக் கூறினார் என்று ஊடகங்களிடம் சொன்னால் அரசியல் சலசலப்பு ஏற்படும், ஏற்கனவே இருதரப்பிலும் உள்ள விசனம் அதிகரிக்கும் என்று மைத்திரி நினைத்திருக்கக் கூடும்.

ஜனாதிபதி மீதான பிரதமர் தரப்பின் சந்தேகக் கண்களைமேலும்கூர்மையாக்குவது மைத்திரியின் எண்ணமாக இருந்திருக்கலாம். உடனடியாக இதனை மறுக்கும் நிலையில் ஜனாதிபதியும் இல்லை.



இடைக்கால அரசில் முன்னாள் அமைச்சர் டலஸைப் பிரதமராக நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டாலும் இன்னொரு தரப்பு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நியமிக்க முனைகிறது. தினேஷ் குணவர்தனவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவையெல்லாம் பேச்சளவில் மட்டுமே நிற்கின்றன.

எம்.பிக்களின் ஆதரவு தங்களுக்கு இருக்குமெனக் கூறும் விமல், கம்மன்பில போன்றோர் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு தேவையான ஆதரவைப் பெற்று, அதனை நிறைவேற்றி, பிரதமரை வீட்டுக்கு அனுப்புவது மட்டுமே இப்போதுள்ள ஒரே தெரிவாக அவர்கள் பக்கம் இருக்கிறது .நாடாளுமன்றம் தீர்மானிக்கலாம். ஆனால் நிறைவேற்றதிகாரம் இதில் தலையிடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக "பிரதமர் என் அண்ணன் எனது சகோதரன். அவர் மீது கைவைக்க மாட்டேன். அவரை நீக்கவும் மாட்டேன். என்று நேற்று முன்தினம் இரவு கூறிய கோட்டா நேற்றும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறார்.



### இந்தியத் தூதுவர் சந்திப்பு

சுயாதீன எம்.பிக்கள் குழுவை கடந்த வாரம் சீனத் தூதுவர் சந்தித்தாரல்லவா? அவர்களை இந்திய உயர் ஸ்தானிகர் நேற்று சந்தித்துள்ளார்.

இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப் பாட்டை உயர்ஸ்தானிகர் பாக்லே மீண்டும் வலியுறுத்தினார். இலங்கை மக்களுடன் என்றும் துணை நிற்பதற்காக இந்திய மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நன்றியினைத் தெரிவித்திருந்தனர். அத்துடன் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைவரம் குறித்த தமது கருத்துக்களையும் அவர்கள் உயர்ஸ்தானிகருடன் பகிர்ந்துகொண்டனர். – என்று செய்திக்குறிப்பொன்றினை இந்திய உயர்ஸ்தானிகரகம் வெளியிட்டுள்ளது.

ஆனால் இதற்கு மேல் பல அரசியல் விடயங்கள் இங்கு பேசப்பட்டுள்ளன என்பதை மட்டும் அறியமுடிந்தது.

### மாநாயக்க தேரர்கள் தீர்மானம்

பிரதமர் பதவி விலகாதபடியாலும், இடைக்கால அரசை அமைப்பது குறித்து ஜனாதிபதி தெளிவாக அறிவிக்காத காரணத்தினாலும் இன்று அல்லது நாளை மாநாயக்க தேரர்கள் விசேட மகா சங்க ஆணை ஒன்றைப் பிறப்பிக்கவுள்ளனர்.

சரியான தீர்வொன்றை முன்வைக்காதவரை மாநாயக்க தேரர்களை சந்திக்க அரச தலைவர்களுக்கு நேரம் வழங்குவதில்லையென்ற முடிவை எடுக்க மாநாயக்க தேரர்கள் தயாராகி வருகின்றனர் எனத்தெரிகிறது. அனைத்துக்கட்சித் தலைவர்களை மாநாயக்க தேரர்கள் விரைவில் சந்தித்து சில கட்டளைகளை இடவுள்ளனர் எனவும் தகவல்.

அரசியல் களம் கலவரமாகிக் கொண்டிருக்கிறது!

காலைக்கதிர் Kalaikkathir

## மஹிந்தவை அக்கற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகாசங்கத்தினரின் சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது. இதன்போது புதிய பிரதமரின் கீழ்தான் இடைக்கால அரசு என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும். அதன்பின்னர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்பொன்று இடம்பெறும். இதன்போது கட்சி தலைவர்களுக்கு மகா சங்கத்தினர் ஆலோசனை வழங்குவார்கள். – என்று ஓமல்பே சோபித தேரர் நேற்று அறிவித்தார்.

கொழும்பு அரசியலில் நேற்று பல்வேறு விடயங்கள் கட்டவிழ்ந்தன.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்யப்போவதில்லை என மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துவரும் நிலையில், புதிய பிரதரின் கீழ் இடைக்கால அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றும் பச்சைக்கொடி காட்டினார் எனத் தகவல் நேற்றுக் காலையில் வெளியாகியது.

தமது அணியுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதற்கான இணக்கப்பாட்டை வெளியிட்டார் என இலங்கையின் 6 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் தேசிய சபையொன்றை ஸ்தாபிப்பதற்கும் சந்திப்பில் இணக்கம் எட்டப்பட்டது என்றார் அவர்.

“பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மேற்படி தேசிய சபையின் வழிகாட்டலுடன்தான் நியமிக்கப்படவேண்டும், அமைச்சுகளின் செயலாளர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் உட்பட அரச நிர்வாகக் கட்டமைப்பின் உயர் பதவிகளுக்கான நியமனங்களும் தேசிய சபை ஊடாகவே இடம்பெறவேண்டும் எனக் கொள்கை அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. எனவும் மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, சர்வக்கட்சி இடைக்கால அரசு, உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளது.

அவ்வேளையிலேயே தற்போதைய பிரதமர் அல்லாமல், புதிய ஒருவரின்கீழ் இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நேற்றைய சந்திப்பு இறுதியானது அல்ல, எனவே, அடுத்துவரும் நாட்களிலும் பேச்சுகள் தொடரவுள்ளன.

அரசை பாதுகாப்பதற்கு நாம் இந்த முயற்சியில் இறங்கவில்லை. நாட்டில் தேர்தலொன்றை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது இல்லை. மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையொன்று அவசியம். அதற்காகவே சர்வக்கட்சி இடைக்கால அரசு யோசனையை சுதந்திரக்கட்சி முன்வைத்தது. – என்று சுதந்திரக் கட்சியின் அரசியல் நகர்வையும் மைத்திரிபால சிறிசேன நியாயப்படுத்தியுள்ளார்.

**பிரதான எதிர்க்கட்சி எதிர்ப்பு**

ஜனாதிபதி பதவி விலகாமல், அமையும் அரச கட்டமைப்புக்கு ஆதரவளிக்க முடியாது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன –

ஜனாதிபதி பதவி விலகாவிட்டால் அவரை அப்பதவியில் இருந்து அகற்றுவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை திரட்டிவருகின்றோம். ஆதரவு வழங்க மறுப்பவர்களின் பெயர் விவரம் அம்பலப்படுத்தப்படும்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவருவது பற்றி ஆராயப்படுகின்றது. அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் முன்வைக்கப்படும். ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவதற்காக அரசமைப்பு ரீதியில் பாவிக்கக்கூடிய அத்தனை அஸ்திரங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி பயன்படுத்தும். – என்று திட்டவட்டமாக அறிவித்தார். எதிர்க்கட்சித் தலைவரும் இடைக்கால அரசுக்கு போர்க்கொடி தூக்கியுள்ளார் என்பது தெரிந்ததே.

அதேபோல பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ நீடிக்க வேண்டும் என மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்திவருகின்றனர். பிரதமருக்குப் பெரும்பான்மை உள்ளதாகவும் அவர்கள் இடித்துரைத்துவருகின்றனர். இதனால் ‘புதிய பிரதமர்’ என்ற விடயம் இன்னும் இழுபறி நிலையிலேயே உள்ளது.

**மகா சங்கத்தினர் களத்தில்**

இந்நிலையில் புதிய பிரதமரின்கீழ் சர்வக்கட்சி இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு, எதிரணிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் மகா சங்கத்தினர் இறங்கியுள்ளனர். புதிய பிரமரின் கீழ்தான் சர்வக்கட்சி இடைக்கால அரசு அமைய வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் –

புதிய பிரதமரின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அமைச்சரவையின்கீழ் சர்வக்கட்சி இடைக்கால அரசையே மகாநாயக்க தேரர்கள் எதிர்பார்த்தனர். தேசிய சபை ஊடாக நடவடிக்கை இடம்பெறவேண்டும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர். மக்களும் இதனையே கோருகின்றனர்.

மகாசங்கத்தினர் ஆயிரம் பேர் இன்று (30ஆம் திகதி) கொழும்புக்கு வருகின்றனர். இதன்போது காத்திரமான முடிவுகள் எடுக்கப்படும். மகாசங்கத்தினரின் கோரிக்கையை ஆட்சியாளர்கள் ஏற்காவிட்டால், மகாநாயக்க தேரர்களின் ஆசியுடன் அனைத்து அரசியல் கட்சிகளையும் புறக்கணிக்கும் முடிவு எடுக்கப்படும். – என்று குறிப்பிட்டார்.

மகாசங்கத்தினரின் சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது. இதன்போது புதிய பிரதமரின் கீழ்தான் இடைக்கால அரசு என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும். அதன்பின்னர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் சந்திப்பொன்று இடம்பெறும். இதன்போது கட்சி தலைவர்களுக்கு மகா சங்கத்தினர் ஆலோசனை வழங்குவார்கள். – என்று ஓமல்பே சோபித தேரர் நேற்று அறிவித்தார்.

மகா சங்கத்தினருக்கும், கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. சர்வக்கட்சி இடைக்கால அரசுக்கு கட்சித் தலைவர்களை ஒன்றிணைப்பதற்கான ஓர் நகர்வாகவே இது கருதப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இம்மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், பங்கேற்பது குறித்து அக்கட்சி முடிவு எடுக்கவில்லை என தெரியவருகின்றது.

---

## நாங்கள் நாங்களாக...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ளுடைய கணவன்மாரை ஒப்படைத்த எங்களுடைய சகோதரிகள், தாய்மார்கள் தங்களுடைய – தன்னுடைய – கணவன் வருவான் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சிங்களச் சகோதர, சகோதரிகளால் பதில் கூற முடியுமா என்று கேட்டிருந்தேன்.

ஆயிரமாயிரம் மனித உயிர்களை நாங்கள் இந்த மண்ணில் விதைத்திருக்கின்றோம்.

சிங்கக் கொடியின் கீழ் எங்களையும் ஏற்று அரவணைக்கும் எண்ணத்தை சிங்கள சகோதர்கள் கொண்டுள்ளார்களா? அல்லது எங்களையும் இந்த நாட்டி னுடைய பிரஜைகளாக சிங்கள மக்கள் ஏற்றுள்ளார்களா? அதை கூட வெளிப்படையாகச் சொல்லுகின்ற ஆற்றல் ஒரு சிங்கள சகோதரர்களுக்கு அல்லது சகோதரிக்கு ஏன் இன்னும் வரவில்லை? தமிழர்களுடைய வரலாற்று தாயகம் வடக்கு, கிழக்கு என்று சொல்வதற்கு ஏன் இன்னும் ஒரு சிங்களச் சகோதரர்களால் முடியவில்லை?

நாங்கள் இன்னும் சிங்கக்கொடிக்குள் அரவணைக்கப்படவில்லை. அதுவும் எங்களுடைய கொடியாக நாங்கள் ஏற்றுக்கொள்கின்ற பக்குவத்தை எங்களுக்கு ஏற்படுத்தும் எண்ணம் இன்னமும் உங்களுக்கு வரவில்லை.

அதனால்தான் நாங்கள் இன்றும் அந்த போராட்டத்திற்கான எண்ணங்களைக் கொண்டிருக்கவில்லை. அமெரிக்க அரசு கூட ஆய்வு செய்கிறது. நான்கு நாள்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து இதனை ஆய்வு செய்கிறார்கள். ஏன் தமிழர்கள் போராடவில்லை என்று பல நாடுகள் கேட்கின்றன.

நாங்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட போது யாரும் கேட்கவில்லை.

இன்று ஒரு மனிதன் கொல்லப்படுகின்ற போது உலகம் கேட்கின்றது. ஆனால் ஓராயிரம் பேர் கொல்லப்பட்ட போதும் யாரும் பேசவில்லை.

கிளிநொச்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலக அதிகாரிகளை எமது மக்கள் இந்த இடத்திலிருந்து செல்ல வேண்டாம் செல்ல வேண்டாம் என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் சென்றார்கள். நாங்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட, கொலை செய்யப்பட்ட இந்த வரலாறுகள் எங்கள் முன்னால் இருக்கின்றன.

இன்று போராட்டத்தில் ஈடுபடும் தென்பகுதி சிங்கள இளைஞர்கள் தமிழ் மக்களுக்கு எதைச் சொல்கின்றனர்? போராட்டத்தில் ஈடுபடும் ஒரு பகுதியினர் சொல்லுகின்றார்கள் – இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்று என்றும், அதனை நாங்கள் நிராகரிக்க மாட்டோம் என்றும், அதற்குள்ளிருந்துதான் நாங்கள் போராடுகின்றோம் என்றுன் குறிப்பிடுகின்றார்கள்.

மகாவம்சத்தில் ஊறிப்போன நீங்கள் இந்த பௌத்த, சிங்கள பேரினவாதக் கொள்கையோடு போராடினால் உங்களுடன் நாங்கள் சேர்ந்து போராட முடியுமா?

நாங்கள் எத்தனையோ ஆண்டுகள் இந்த மண்ணிலே நசுக்கப்பட்டவர்கள். மீண்டும் மீண்டும் சாம்பலிலே இருந்து எழும் ஓர் இனமாக எங்களிடம் இருந்த திறமைகளுடன் இந்த மண்ணில் காலூன்றி இருக்கின்றோம். நாங்கள் இந்த பொருளாதார தடைகள் ஆயிரம் ரூபாவுக்கு பெட்ரோல், மண்ணெண்ணெய் வாங்கி அதனைச் சிக்கனமாக வைத்து வாழப் பழகிப் பக்குவப்பட்டவர்கள்.

நாங்கள் எங்களுடைய மொழி ரீதியாக, கலாசார ரீதியாக, பண்பாட்டு ரீதியாகத் தோன்றி வளர்ந்தவர்கள். விஜயனின் வருகைக்கு முன்னரே நாங்கள் வாழ்ந்த இனம். ஆகவே நாங்கள் இந்த மன்னனுடைய பூர்வீகக் குடிகள். இன்று நாங்கள் எங்கள் இறைமையை இழந்து, சுதந்திரத்தை இழந்து, நாங்கள் இப்போதும் அடிமைகளாக எங்களைச் சுற்றி ஒரு ராணுவ வேலிக்குள், ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள், வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் நாங்களாக இந்த மண்ணிலேயே வாழுகின்ற உரிமையும், நீங்கள் நீங்களாக வாழுகின்ற உரிமையும் இருக்கின்றது என்பதை நீங்கள் எப்போது வெளிப்படையாக பேச ஆரம்பிக்கும் போதோ அல்லது அதை ஏற்றுக்கொள்ள துணிகின்றீர்களோ அப்போதுதான் இந்த நாட்டினுடைய பொருளாதாரம், அரசியல் முன்னேற்றம் என்பது சாதாரணமானதாக மாறும். – என்று அங்கு கூறினார் சிறிதரன் எம்.பி.

---

## நாடு முழுவதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியவற்றின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள – கடத்தப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் – தராகி சிவராமின் 17 ஆவது நினைவு நிகழ்வும், நீதி கோரிய போராட்டமும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கோ.கருணாகரம், இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம், முன்னாள் அரசாங்க அதிபர் மா.உதயகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவதிரன், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அமரர் சிவராம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் சிவராம் அவர்கள் உட்பட படுகொலை செய்யப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி வேண்டிய ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராம் அவர்களை நினைவு கூரும் முகமான நிகழ்வில் நாங்கள் நின்று கொண்டிருக்கின்றோம். இன்று வரைக்கும் இப்படுகொலை தொடர்பிலான நீதி கிடைக்கப்படவில்லை. கொழும்பிலே கடத்தப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயமான நாடாளுமன்றத்திற்குப் பின்னால் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. அவ்வாறு யாரும் கேள்வி கேட்க முடியாத கொடூரமான நிகழ்வுகள் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நடந்திருக்கின்றன.

அதிலே அண்ணன் சிவராம் அவர்கள் மிகவும் முக்கியமானவர். தமிழ்த் தேசியம் பற்றி பலவிதமான கட்டுரைகள் ஆங்கில மொழியிலும் தொடர்ச்சியாக எழுதி எமது பிரச்சினையை உலகிற்கு அறிவித்ததில் அவர் மிக முக்கியமானவர். அவரை அரச அனுசரணையோடு கடத்திப்படுகொலை செய்திருந்தார்கள். இன்று வரைக்கும் அதற்குரிய ஒழுங்கான விசாரணையோ நீதியோ செய்யப்படவில்லை. அதற்குக் கண்டனம் தெரிவித்து இன்று இங்கே போராட்டம் நடைபெறுகின்றது.

இந்தப் போராட்டம் நடைபெறுகின்ற அதேவேளை இலங்கை பூராகவும் பாரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நேற்றைய தினம் கடையடைப்பு, தொழிற்சங்கங்கள் எல்லாம் வீதியில் இறங்கிப் போராடினார்கள். தற்போது மக்கள் திரண்டு திரண்டு அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதியும், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என போர்க்கொடியை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் தென்பகுதியிலே நிகழ்கின்ற போது வடக்கிலேயும் கிழக்கிலேயும்தான் இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகள் பலவந்தமாக மேற்கொள்ளப்படுகின்றன. நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யக் கூடாது, வீதிகளை முடக்கக் கூடாது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸரினால் நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு கையளிக்கப்பட்ட அதேவேளை நாடு முழுவதும் முடக்கப்பட்டிருந்தது. பிரதான எதிர்க்கட்சி கண்டியில் இருந்து பாரிய ஆர்ப்பாட்டத்தினை முழு வீதியையும் மறித்தே செய்கின்றார்கள். அங்கே ஒரு சட்டம்; இங்கே வேறு சட்டங்கள்.

நாடு முழுவதும் கிளந்தெழுந்திருக்கின்ற போதும் கூட எங்களது வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களிலே எந்தவித சத்தங்களும் கேட்கக் கூடாது என்ற வகையிலே அரசாங்கம் செயற்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை பதவி விலக வேண்டும். நாட்டை இப்படியாக மிக மோசமான நிலைக்குள் தள்ளியிருப்பவர்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கத் தகுதியற்றவர்கள் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். நாடாளுமன்றத்திலும், வெளியிலும் இதற்கான எமது போராட்மும் தொடரும்.– என்று தெரிவித்தார்.